**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED EXPANSION OF FOUNDRY UNIT OF M/S. ASHOK LEYLAND LIMITED FROM 2790 TPM TO 6125 TPM OF FERROUS CASTINGS AT S.F.NO. 39A & 39B, KATHIVAKKAM VILLAGE, TIRUVOTTIYUR TALUK, CHENNAI DISTRICT ON 29-09-2023 AT 11.00 AM BY TAMILNADU POLLUTION CONTROL BOARD, AMBATTUR.**

| | | |
|---|---|---|
| Project Name | : | The Proposed Expansion of Foundry Unit of M/s. Ashok Leyland Limited from 2790 TPM to 6125 TPM of Ferrous Castings, S.F.No. 39A & 39B, Kathivakkam Village, Tiruvottiyur Taluk, Chennai District. |
| Date andTime | : | **29.09.2023 AT 11.00AM** |
| Venu | | Annai Sivagami Nagar Samuthaya Nala Maligai, Ennore Express Road, Ennore, Chennai-57. |
| Presence of | : | 1. Tmt. Rashmi Siddharth Zagade, I.A.S., District Collector, Chennai District<br><br>2. Tmt. S Indira Gandhi., M.E., District Environmental Engineer. Tamilnadu Pollution Control Board, Ambattur<br><br>3. List of public participants is attached. |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Ambattur welcomed the District Collector and the public and informed that the unit of M/s. Ashok Leyland Limited – foundry division located at S.F. No. 39A & 39B, Kathivakkam Village, Tiruvottiyur Taluk, Chennai District has proposed to expand its production of Ferrous Castings from 2790 TPM to 6125 TPM which requires Environmental Clearance from the State Environmental Impact Assessment Authority, Tamil Nadu under Environmental Impact Assessment Notification, 2006.

Based on that, the Environmental Impact Assessment report was prepared by the unit as per terms of conditions issued by Environment Impact Assessment Committee and

published public notice as mandate informing the Public Hearing in two newspapers namely "New Indian Express" in English& "Dinakaran" in Tamil on 24.08.2023 and accordingly today 29-09-2023 Public Hearing was arranged.

On behalf of the unit of M/s. Ashok Leyland Limited (Foundry Division), the QCI consultant has started the presentation of the salient feature of the proposed expansion project. Meanwhile, a group of people from the nearby villages along with the Hon'ble Member of Legislative Assembly (MLA) - Tiruvottiyur constituency interrupted the presentation vehemently and stated the following:

1) As the industry is located in Ward 2 of Greater Chennai Corporation (GCC), why the public hearing is conducted at ward 3 of GCC, hence the Public hearing should be called off.
2) The Public hearing is organised without the prior information and approval from MLA and the GCC ward Councilors, the public hearing shall be called off and the same shall be scheduled only after getting approval.
3) As the unit is causing a lot of pollution and health hazards to the nearby village people and not providing any employment to the local people, the expansion activity will not be allowed and hence the public hearing shall be called off.

**The District Collector and the District Environmental Engineer** tried their level best to convince the MLA, GCC ward Councillors and the public, stating the following so as to proceed with the public hearing,

1) **The District Environmental Engineer** has informed that in the EIA Notification 2006, it is not specified that the public hearing should be conducted only in the Ward in which the unit is located. Already this Public hearing was proposed to be conducted on 11.05.2023 at Joseph Mall (Marriage hall) which was near the industry location, but it was postponed by the District Collector, Chennai as oral representation was received from the public to change the venue as it is located near to the Church. Hence Annai Sivagami Nagar Samuthaya Nala Maligai, Ennore Express Road, Sivagami Nagar, next nearest venue was chosen for conducting the public hearing.
2) **The District Environmental Engineer** has informed that, as per the EIA Notification 2006, the notice about the title of the project, date, time and venue of the Public Hearing process has to be published by the Tamil Nadu Pollution

Control Board both in Tamil and in English Newspapers 30 days in advance and the prior intimation/approval from MPs/MLAs/Councilors are not mandatory. All the views of the public are recorded through audio and video.

3) **The District Collector** has informed that the meeting is conducted as per the procedure only and all the views/queries are recorded and will be sent to the SEIAA-TN. After the completion of the presentation the opinions will be recorded one by one.

4) **The District collector** has informed several times to the MLA and others that whatever the opinion on the venue of the public hearing and the on expansion project of the unit will be properly recorded and communicated to the concerned authority for taking decisions on the issue of environmental clearance to the unit.

**However, the following views, Queries and opinions were also raised by the MLA, Ward Councillor and Public and recorded during the Public Hearing.**

**1. Member of Legislature Assembly, Tiruvottiyur Constituency**

- Public hearing has to be postponed based on the views of public. The unit has not provided CSR activities like education, school, hospital facilities. The next public hearing has to be conducted at Ennore and I will get the permission from local school available here.
- More than 2000 employees are working in this unit but all are north Indians and not from home town and giving health issues to all the local public. The public rejecting this project, hence it should be rejected.
- I am MLA and representative of 3,20,000 people, this public hearing was conducted without my knowledge. The officials have to stay here and see.
- People's representative MLA and others who came here want to call off this meeting. So cancel this meeting and conduct at Industry premises.
- District Collector have all powers and also to cancel the meeting.
- As I am an MLA, concurrence from me was not obtained to conduct this meeting. Have to go village-wise to get views. More than 30 nos. have Asthama and Cancer. At first, notice was not given to Nehru Nagar Periyapakkam. So call off the meeting.

- During the investigation of complaints from the public, Industries are only inspected whereas the complainant was not enquired on field. Hence, so dissolve the meeting.

**2. Ward Councillor:**

- Bit notice was issued one day before the Public hearing which was not in detail. Therefore the public hearing was planned without proper intimation.
- Due to the expansion of this industry, the total infrastructure of Ennore region will be changed in considering the Ennore land area, population and industrial area.
- The current presentation details were not shared anywhere previously.
- This unit has already obtained permission for only 35% from TNPCB, but now it is in operation with 50% capacity. If it is expanded for 100% then what will be our condition. We are already facing health problems and dieing due to pollution of M/s. Coramendal fertilizers.
- The Government officials should stand for the people and not against the public.
- Before conducting public hearing the notice has to be issued and opinion has to be obtained from MLA, ward councillors and public.
- Already pollution is so high in this region, so a committee has to be formed with Govt. officials to carryout a detailed study before conducting the public hearing.
- The present infrastructure is sufficient for current production capacity only. The current infrastructure is not enough to handle the expansion of production 2.5 times more.

**3. Public:**

- The unit has not conducted a single medical camp in this area. The public have to be visited and awareness have to be given. If there is

no foundry operation then IT industry might have come.

- Due to Air pollution there is a lot of chances for health hazards, hence a committee has to be formed to conduct Air survey in which the District collector, local politicians, public representative are to be present. The committee has to study Air and Water pollution, if all the parameters are within the standards and after convincing the local public, the expansion activity shall be permitted.
- A industry has to provide employment to the local public and should understand the problems of local people. Hence the public hearing has to be conducted at industry premises.
- Bit notice was printed in English was given for public hearing, so call off this meeting.
- Hall was booked on 28th Aug 2023 and hall incharge gave wrong information as for Collector welfare scheme program. Three days before only came to know that it is for conducting public hearing. Information notice was not kept at Ennore. Only 40% are public and 60% are industry people, if we walk out, this meeting will be conducted with that persons. So requesting to call off the meeting at our presence.

**4. Poovulagin Nanbarkal:**

- A report was prepared and sent through mail for more than 15 times, during emission of smokes called through telephone but no reply.

Also, some written petitions were received from the following which are enclosed for reference.

**1. There were 37 nos. of representations received from "Naam Thamizhar Katchi" opposing the expansion activity stating that,**

- There is no need for new expansion activity as already Ennore region is highly polluted with Air Pollution. Hence new expansion is not required. Increase in production for 3 times will lead to increase in pollution for 3 times.

**2. Environment Protection Association NGO:**

- The Expansion activity of M/s. Ashok Leyland (Foundry division) is necessary even though the unit causes pollution. In the world of science and technology,

the unit's expansion is necessary considering the employment opportunity to the public. The unit must use the CSR fund to the surrounding people and give first priority in employing the local people. In addition to that the unit is requested to use the advanced techniques in reducing the air pollution.

**3. Ennore all villages welfare association trust:**

- The people in Katthivakkam village, Ennore are surrounded by Industries. The emission from these units causes cancer, respiratory problem, heart problems and even death to the peoples. During the pandemic corana period huge number of death were caused in Kathivakkam village. Already the existing activity is causing lot of health problems and further increase in production activity will increase the death rate.

**4. Ennore people welfare association:**

- There are 60,000 people in the Ennore area and more than 30 nos. of Red category industries causing land, water and Air pollution. These are evidenced through the reports of committee formed by the Hon'ble NGT. The report of SRM and Healthy Energy initiative India states that about 63% of children at Ennore are facing Respiratory diseases and cancer. Inspite of this getting public opinion about the expansion of industry is equal to killing out children. Hence the expansion activity has to be stopped.

**5. Ennore Meenavar welfare association:**

- The unit was using amine gas instead of Co2 in the core section which caused cancer to 3 workers and lead to death. The black sand used in the foundry division was not disposed properly and scientifically and accumulated about 2000 T within the premises causing land and water pollution leading to cancer.
- The unit is creating Noise pollution creating ear problems. The unit was not giving CSR fund and not conducting medical camp. The unit has given job during commencing of the activity and later on, no job has been provided to the local people.
- The unit has to proceed with present production capacity and shall not be permitted for expansion.

- The unit has to give permanent job to all the affected peoples.

**6. Sindhanai Sirpi Singaravelar Padipagam:**

- The unit of Coramandal Fertilizer is creating toxic emission creating Air pollution to Ennore children and publics. Hence Air pollution control measures are provided to prevent the air pollution and save the people.

**In spite of the efforts taken to clarify the queries raised by the MLA/Councilors/public, the MLA and the public continued to demand that the public hearing shall be called off and that they will not leave the venue until it is called off. There was lot of commotion and agitation in the public hearing and there was huge continuous insistence to the District Collector to call off the public hearing for the proposed expansion of the M/s. Ashok Leland Limited – Foundry Division. Hence the District Collector, at last was forced to call off the Public hearing of the unit of M/s. Ashok Leland Limited – Foundary Division for the Proposed Expansion of Foundry unit from 2790 TPM to 6125 TPM of Ferrous Castings at Kathivakkam Village, Tiruvottiyur Taluk, Chennai District on 29.09.2023 and the meeting came to an end.**

| | |
|---|---|
| The District Environmental Engineer<br>Tamil Nadu Pollution Control Board<br>Ambattur | The District Collector<br>Chennai District |

**<u>சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், புல எண். 39 A & 39 B கத்திவாக்கம் கிராமத்தில், அமைந்துள்ள தி/ள். அசோக் லேலண்ட் லிமிடெட், (ஃபவுண்டரி டிவிசன்) உத்தேசித்துள்ள உற்பத்தி திறனை மாதத்திற்கு 2790 டன்னில் இருந்து 6125 டன்னாக விரிவாக்கம் குறித்து சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறுதல் தொடர்பாக 29.09.2023 அன்று காலை 11.00 மணியளவில் அன்னை சிவகாமி நகர் சமுதாய நலமாளிகை, எண்ணூர் எக்ஸ்பிரஸ் சாலை, அன்னை சிவகாமி நகர், எண்ணூர், சென்னை 600057–ல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின், அம்பத்தூர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகத்தால் நடத்தப்பெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கைகள் விபரங்கள் :</u>**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர்: | தி/ள். அசோக் லேலண்ட் லிமிடெட், வார்ப்பாலை உற்பத்தி திறனை மாதத்திற்கு 2790 டன்னில் இருந்து 6125 டன்னாக விரிவாக்கம், புல எண். 39 A & 39 B, கத்திவாக்கம் கிராமத்தில், திருவொற்றியூர் தாலுக்கா, சென்னை மாவட்டம் |
| நாள்மற்றும் நேரம்: | 29/09/2023 அன்று காலை 11.00 மணி. |
| இடம்: | அன்னை சிவகாமி நகர் சமுதாய நலமாளிகை, எண்ணூர் எக்ஸ்பிரஸ் சாலை, சிவகாமி நகர், எண்ணூர், சென்னை 600057. |
| முன்னிலை: | 1.திருமதி. ராஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர்.<br><br>2.திருமதி.எஸ்.இந்திராகாந்தி.ஏம்.இ. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், அம்பத்தூர்<br><br>3. கருத்துக் கேட்பு கூட்டத்தில் பங்குப் பெற்ற அனைவரின் விபரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. |

- மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், அம்பத்தூர் அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் வரவேற்றார். மேலும், புல எண் 39A & 39B, சென்னை மாவட்டம், திருவொற்றியூர் வட்டம், கத்திவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள தி/ள்.அசோக் லேலண்ட் லிமிடெட், ஃபெரஸ் காஸ்டிங் ஃபவுண்டரி டிவிசன் விரிவாக்கத் திட்டத்தில் உற்பத்தி திறனை அதிகரிக்கும் வகையில் ஃபெர்ரஸ் காஸ்டிங்க் உற்பத்தியை மாதத்திற்கு 2790 டன்னிலிருந்து 6125 டன்னாக அதிகரிப்பது குறித்து உத்தேசித்துள்ளனர். இந்த விரிவாக்கத்திற்க்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுவால் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு 2006, அறிவிப்பின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வாங்கவேண்டும்.
- மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுக் குழுவால் வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படி தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது என்றும், கருத்து கேட்பு கூட்டம் இன்று 29.09.2023 நடைபெறுவதற்கான அறிவிப்பு ஆங்கிலத்தில் "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" மற்றும் தமிழில் "தினகரன்" என்ற இரு செய்தித்தாள்களில் 24.08.2023 வெளியிடப்பட்டது என்றும். அதன்படி இன்று 29-09-2023 கருத்து கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்.
- தி/ள்.அசோக் லேலண்ட் லிமிடெட், சார்பாக நிபுணர் உத்தேசிக்கப்பட்ட ஃபவுண்டரி யூனிட்டின் செயல்பாடு மற்றும் சுற்றுச்சூழலின் தாக்கம் பற்றி விரிவாக எடுத்துரைக்கும் பொழுது, அருகிலுள்ள கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் விளக்கக் காட்சியை நடத்த விடாமல் இடையூறு செய்தனர் அப்போது மாண்புமிகு திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியதாவது.
- இந்த தொழிற்சாலை இரண்டாவது வார்டில் உள்ளது என்றும், கருத்துக் கேட்பு கூட்டம் மூன்றாவது வார்டில் நடைபெறுகிறது என்றும். எனவே, இக்கூட்டம் நடைபெறக்கூடாது என்றும், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் சென்னை பெருநகர

மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களிடம் முன் தகவல் மற்றும் முன்ஒப்புதல் பெறாமல் கருத்து கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்ததால் கருத்துக்கேட்புக் கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும், ஒப்புதல் பெற்ற பின்னரே கருத்துக்கேட்புக் கூட்டத்தை நடத்த திட்டமிடவேண்டும் என்றும், இந்த தொழிழற்சாலையின் இயக்கத்தால் அருகிலுள்ள கிராம மக்களுக்கு நிறைய மாசு மற்றும் சுகாதார கேடுகளை ஏற்படுத்துகிறது என்றும் மற்றும் உள்ளூர் மக்களுக்கு எந்த வேலையும் வழங்காததால், விரிவாக்க நடவடிக்கை அனுமதிக்க கூடாது என்றும், எனவே கருத்துக்கேட்புக் கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களை சமாதானப்படுத்த தங்களால் இயன்ற முயற்சி மேற்கொண்டனர், மேலும், கருத்துக்கேட்பு கூட்டத்தைத் தொடர்ந்திட கீழ்க்கண்டவற்றை எடுத்துரைத்தனர்.

1. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு 2006, அறிவிப்பின் கீழ் தொழிற்சாலை அமைந்துள்ள வார்டில் மட்டும் கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டும் என குறிப்பிடப்படவில்லை என்றும். இதற்கு முன்பு, இந்த கருத்துக் கேட்பு கூட்டம் 11.05.2023 அன்று தொழிற்சாலையின் அருகில் உள்ள ஜோசப் மாலில் (திருமண மண்டபம்) நடத்த உத்தேசிக்கப்பட்டது, ஆனால் இந்த இடம் தேவாலயத்திற்கு அருகில் அமைந்துள்ளதால் அந்த இடத்தை மாற்றுமாறு பொதுமக்களிடம் இருந்து வாய்மொழியாகப் எதிர்ப்புகள் பெறப்பட்டதால், சென்னை மாவட்ட ஆட்சியரால் ஒத்திவைக்கப்பட்டது. எனவே அடுத்த அருகில் உள்ள இடமான அன்னை சிவகாமி நகர் சமூகநல மாளிகை, எண்ணூர் எக்ஸ்பிரஸ் சாலை, சிவகாமி நகர்–ல் பொதுமக்கள் கருத்து கேட்பு

கூட்டம் நடத்த தேர்வு செய்யப்பட்டது என்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்தார்.

2. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிப்பு 2006 இன் படி, திட்டத்தின் தலைப்பு, கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் தேதி, நேரம் மற்றும் இடம் பற்றிய அறிவிப்பை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தமிழ் மற்றும் ஆங்கில செய்தித்தாள்களில் 30 நாட்களுக்கு முன்னதாக வெளியிட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களிடம் முன் தகவல் மற்றும் முன்ஒப்புதல் பெறவேண்டியது பற்றிய எந்த குறிப்பும் இல்லை என்றும், பொதுமக்களின் அனைத்து கருத்துகளும் ஆடியோ மற்றும் வீடியோ மூலம் பதிவு செய்யப்படுகின்றன என்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துள்ளார்.
3. கூட்டமானது நடைமுறைப்படி மட்டுமே நடத்தப்படும் என்றும், அனைத்து கருத்துகள்/கேள்விகளும் பதிவு செய்யப்பட்டு SEIAA–TN க்கு அனுப்பப்படும் என்றும், விளக்கக்காட்சிக்குப் பிறகு, கருத்துகள் ஒவ்வொன்றாக பதிவு செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.
4. சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களுக்கு, கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் இடம் மற்றும் விரிவாக்க திட்டம் குறித்த கருத்து எதுவாக இருந்தாலும் முறையாக பதிவு செய்து சம்பந்தப்பட்ட ஆணையத்திற்க்கு அனுப்பபடும் என மாவட்ட ஆட்சியர் பலமுறை தெரிவித்தார்.

மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கூட்டத்தை ரத்து செய்ய கூறியதோடு கீழ் கண்ட கருத்துக்களையும் பதிவு செய்தனர்.

**1. சட்டமன்ற உறுப்பினர்;**

- பொதுமக்களின் கருத்துகளின் அடிப்படையில் கருத்து கேட்பு கூட்டம் ஒத்திவைக்கப்பட வேண்டும். கல்வி, பள்ளி, மருத்துவமனை வசதிகள் போன்ற CSR செயல்பாடுகளை இந்த நிறுவனம் வழங்கவில்லை. அடுத்த கருத்து கேட்பு கூட்டம் எண்ணூரில் நடத்தப்பட வேண்டும் என்றும், உள்ளூர் பள்ளியில் அனுமதி பெற்று தருகிறேன் என்று தெரிவித்தார்
- இந்த பிரிவில் 2000 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிகின்றனர், ஆனால் அனைவரும் வட இந்தியர்கள், உள்ளூர் மக்கள்அல்ல, மேலும் அனைத்து உள்ளூர் மக்களுக்கும் சுகாதார பிரச்சினைகளை வழங்குகின்றனர். உள்ளூர் மக்களை நிராகரிக்கும் திட்டத்தை நிராகரிக்க வேண்டும்.
- நான் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் 3,20,000 மக்களின் பிரதிநிதி, எனக்கு தெரியாமல் இந்த கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படுகிறது. அதிகாரிகள் இங்கு தங்கி பார்க்க வேண்டும்.
- இங்கு வந்த மக்கள் பிரதிநிதி சட்டமன்ற உறுப்பினர், மற்றவர்களும் இந்தக் கூட்டத்தை ரத்து செய்ய விரும்புகிறார்கள். எனவே இந்த கூட்டத்தை ரத்து செய்துவிட்டு தொழிற்சாலை வளாகத்தில் நடத்த திட்டமிடவேண்டும்.
- மாவட்ட ஆட்சியருக்கு அனைத்து அதிகாரங்களும் உள்ளது எனவே கூட்டத்தை ரத்து செய்யவும்.
- இந்தக் கூட்டத்தை நடத்த சட்டமன்ற உறுப்பினராகிய என்னிடமிருந்து ஒப்புதல் பெறப்படவில்லை. கருத்துகளை பெற கிராமம் வாரியாகச் செல்ல வேண்டும். 30 க்கும் மேற்பட்ட மக்களுக்கு ஆஸ்துமா மற்றும் புற்றுநோய் உள்ளது. முதலில் நேரு நகர், பெரியப்பாக்கத்திற்கு நோட்டீஸ் வழங்கப்படவில்லை. எனவே கூட்டத்தை ரத்து செய்யுங்கள்.
- பொதுமக்களிடமிருந்து வரும் புகார்களின் விசாரணையின் போது, தொழிற்சாலைகள் மட்டுமே ஆய்வு செய்யப்படுகின்றன, அதேசமயம் புகார்தாரர் களத்தில் விசாரிக்கப்படவில்லை. எனவே, கூட்டத்தை கலைக்க வேண்டும்.

## 2. மாமன்ற உறுப்பினர்கள்:

- கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு ஒரு நாள் முன்புதான் துண்டு அறிக்கை வழங்கப்பட்டது, அது விரிவாக இல்லை. எனவே முறையான அறிவிப்பு இல்லாமல் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்நிறுவன்த்தின் விரிவாக்கம் காரணமாக எண்ணூர் நிலப்பரப்பு, மக்கள் தொகை மற்றும் தொழில்துறை பகுதி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு எண்ணூர் பகுதியின் மொத்த உள்கட்டமைப்பு மாற்றப்படும்.
- தற்போதைய திரையிடப்பட்ட விளக்கக்காட்சி விவரங்கள் முன்பு எங்கும் பகிரப்படவில்லை.
- இந்த நிறுவனம் ஏற்கனவே தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தில் இருந்து 35% மட்டுமே அனுமதி பெற்றுள்ளது, ஆனால் இப்போது அது 50% திறனுடன் செயல்பாட்டில் உள்ளது. அதை 100% விரிவுபடுத்தினால் எங்களது நிலை என்னவாகும். நாங்கள் ஏற்கனவே தி/ள் கோரமன்டல் உரதொழிற்சாலையினால் உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு மரணம் அடைகிறோம்.
- அரசு அதிகாரிகள், பொதுமக்களுக்கு எதிராக நிற்காமல் மக்களுக்காக நிற்க வேண்டும்.
- பொது விசாரணை நடத்துவதற்கு முன் நோட்டீஸ் வழங்கி, சட்ட மன்ற உறுப்பினர், வார்டு கவுன்சிலர்கள் மற்றும் பொதுமக்களிடம் கருத்து பெற வேண்டும்.
- ஏற்கனவே இப்பகுதியில் மாசு அதிகமாக உள்ளது, எனவே அரசாங்கத்துடன் ஒரு குழு அமைக்க வேண்டும். பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை நடத்தும் முன் அதிகாரிகள் விரிவான ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.
- தற்போதைய உள்கட்டமைப்பு தற்போது உள்ள உற்பத்தி திறனுக்கு மட்டுமே போதுமானது. தற்போதைய உள்கட்டமைப்பு உற்பத்தியை 2.5 மடங்கு அதிகமாக கையாள போதுமானதாக இல்லை.

3. பொதுமக்கள்:

- இந்நிறுவனம் எண்ணூர் பகுதி மக்களின் உடல் நலம் குறித்து ஒரு மருத்துவ முகாம் கூட நடத்தவில்லை. ஃபவுண்டரி இல்லையென்றால் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் வந்திருக்கும்.
- காற்று மாசுவினால் பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது எனவே காற்றின் தன்மை குறித்து ஆய்வு செய்ய குழு அமைக்க வேண்டும். மேலும், குழுவில் மாவட்ட ஆட்சியர், உள்ளூர் அரசியல்வாதி, மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். காற்றின் தரம், நீரின் தரத்தை ஆய்வு செய்ய வேண்டும். அனைத்தும் சரியாக உள்ளது என மக்களை சமாதானம் செய்தால், திட்டத்தை அனுமதிக்கலாம். இந்நிறுவனம் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் மற்றும் பாதிக்கப்படும் மக்களின் நிலைமையை அறிய வேண்டும். எனவே கூட்டத்தை அதே பகுதியில் வைக்க வேண்டும். துண்டு அறிக்கை ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டுள்ளது எனவே கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.
- மண்டப உரிமையாளரிடம் விசாரித்தபோது மண்டபம் 28ஆம் தேதி பதிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர் மூலம் நலத்திட்டம் கொடுக்க உள்ளோம் என தவறான தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று நாட்களுக்கு முன்பு தான் கருத்து கேட்பு கூட்டம் என தெரிவிக்கப்பட்டதாக கூறினார். கருத்து கேட்பு கூட்டத்தின் பதாகை எண்ணூரில் வைக்கப்படவில்லை. இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் 40 சதவீதம் தான் பொதுமக்கள் 60 சதவீதம் நிறுவனத்தின் ஆட்கள். நாங்கள் புறக்கணித்து சென்றால் அவர்களை வைத்து கூட்டம் நடத்தப்படும். அதனால் கூட்டத்தை எங்கள் முன் ரத்து செய்ய வேண்டும்.

4. பூவுலகின் நண்பர்கள் சங்கம்:

- ஒரு அறிக்கை தயார் செய்து 15 க்கும் மேற்பட்ட முறை மின்னஞ்சல் அனுப்பப்பட்டது. இங்கு ஒவ்வொரு முறையும் தொழிற்சாலையில் இருந்து புகை

வெளியேற்றப்படும் போது தொடர்பு கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்பிற்கு எந்தவித பதிலும் இல்லை.

மேலும் கீழ்க்கண்டவர்களிடம் இருந்து சில எழுத்துப்பூர்வ மனுக்கள் பெறப்பட்டு இத்துடன் இணைக்கபட்டுள்ளது.

1. <u>"நாம் தமிழர் கட்சி",</u> (நாம் தமிழர் கட்சியை சார்ந்த சுமார் 37 நபர்களிடமிருந்து பெறப்பட்ட மனு)
   - ஏற்கனவே பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ள எண்ணூர் பகுதியில் புதிய விரிவாக்கம் எந்த விதத்திலும் ஏற்புடையது அல்ல மூன்று மடங்கு விரிவாக்கத்தால் மூன்று மடங்கு மாசு ஏற்படும்
2. <u>சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழு:</u>
   - தி/ள்.அசோக் லேலண்ட் உருக்காலை விரிவாக்கம் மற்றும் உற்பத்தி பெருக்கத்தினால் மாசு ஏற்பட்டு மக்களுக்கு உடல் மற்றும் மனதளவில் பாதிப்பு ஏற்படும் என்பது அனைவரும் அறிந்தது என்றாலும் தற்போதைய நவீன அறிவியல் உலகத்தில் நாட்டில் முன்னேற்றம் மற்றும் மக்களின் வேலைவாய்ப்பு இவற்றை கருத்தில் கொள்ளும்போது தொழிற்சாலை முன்னேற்றம் அவசியமாகிறது. எனவே இந்நிறுவனங்களால் பாதிக்கப்படும் பகுதியில் உள்ள மக்களுக்கு உதவ வேண்டும். வெளிப்படையான முறையில் சி.எஸ்.ஆர் நிதிகளை மக்கள் அறிந்திட பயன்படுத்திட வேண்டும், பாதிக்கப்படும் பகுதியை சார்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். அனைத்து ஒப்பந்த சார்ந்த தொழில்களையும் அந்த பகுதி மக்களுக்கு வழங்க வேண்டும். மேலும், மாசு தொடர்பாக நிறுவனம் பாதுகாப்பான 100 சதவீதம் அறிவியல் தொழில்நுட்ப கருவிகளைக் கொண்டு மாசற்ற ஒரு சூழ்நிலையை மக்களுக்கு உருவாக்கி தந்திட வேண்டும் என்று பணிவன்போடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

3. <u>எண்ணூர் அனைத்து கிராம பொது நல சங்கம்:</u>

- கத்திவாக்கம் எண்ணூர் நகரத்தை சுற்றிலும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளது. நடுவில் மக்கள் வசித்து வருகிறார்கள். இத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுப் புகையால் பொதுமக்கள் காசநோய், இருதய நோய், சுவாசக் கோளாறு, முடக்குவாதம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்து வருகிறார்கள். கொரோனா நோய் தொற்று காலத்தில் கத்திவாக்கத்தில் அதிக மக்கள் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே இருக்கும் உருக்காலையில் இருந்து வெளிவரும் நச்சுப் புகையினால் மக்கள் பலர் நோய் தொற்றுக்கு பாதிக்கப்பட்டு வருகிறார்கள். மீண்டும் உருக்காலையில் புதிய இயந்திரத்தை அமைத்தால் கத்திவாக்கம் நரகமே சுடுகாடாக மாறிவிடும் அபாயம் உள்ளது.

4. <u>எண்ணூர் மக்கள் நல சங்கம்:</u>

- எண்ணூர் பகுதியில் சுமார் 60,000 க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறோம். எங்கள் பகுதியை சுற்றியுள்ள 30க்கும் மேற்பட்ட சிவப்பு தொழிற்சாலை கழிவுகளால் நிலம், நீர், காற்று மாசு அடைந்துள்ளது என்பதை பல்வேறு வழக்குகளில் பசுமை தீர்ப்பாயம் அமைந்த குழுக்களின் அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. கடந்த ஆண்டு எஸ்.ஆர்.எம் மற்றும் ஹெல்த்தி எனர்ஜி இனிஷியடிவ் இந்தியா இணைந்து நடத்திய ஆய்வில் எண்ணூரில் வாழும் 63% குழந்தைகள் சுவாச நோய்கள் மற்றும் புற்றுநோயை எதிர்கொள்வதாக கூறுகிறது. இதையும் மீறி தொழில் விரிவாக்கம் குறித்து பொதுமக்களிடம் கருத்து பெறுவது குழந்தைகளை கொல்வதற்கு சமம். எனவே விரிவாக்கப் பணியை நிறுத்த வேண்டும்.

5. <u>எண்ணூர் மீனவ மக்கள் நல சங்கம்:</u>

- இத்தொழிற்சாலையில் கோர் ஷாப்பில் கார்பன்–டை–ஆக்சைடுக்குப் பதிலாக அமீன் வாயுவைப் பயன்படுத்தியது, இது 3 தொழிலாளர்களுக்கு புற்றுநோயை உண்டாக்கி மரணத்திற்கு வழிவகுத்தது.. இந்நிறுவனத்தில் இருந்து

வெளிவரும் கருப்பு மண் கழிவுகளை வெளியேற்றாமல் சுமார் 2000 டன்னுக்கு அதிகமாக கருப்பு மண் கழிவுகளை திறந்து வெளியில் சேகரித்து வைத்துள்ளன. இது புற்று நோய்க்கு வழி வகிக்கிறது.

- இந்நிறுவனம் அதிகபடியான ஒலியை வெளியேற்றி வருவதால் மக்களுக்கு காது கேட்டுத்திறன் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இந்நிறுவனம் மக்களுக்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய வழங்க வேண்டிய சி. எஸ். ஆர் நிதியை இதுவரை வழங்கவில்லை மற்றும் மருத்துவ முகாம் நடத்தவில்லை. நிறுவனம் தொடங்கிய போது வேலைவாய்ப்பை அளித்தது. பின்னர், உள்ளூர் மக்களுக்கு வேலை வழங்கப்படவில்லை.
- இந்நிறுவனம் தற்போது உள்ள உற்பத்தி நிலையிலேயே தொடர வேண்டும். நிறுவன விரிவாக்கத்தை அனுமதிக்க கூடாது.
- மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர பணியை வழங்க உத்தரவிட வேண்டும் என்று தங்களை மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

6. <u>சிந்தனை சிற்பி சிங்காரவேலர் படிப்பகம்</u>:
   - வடசென்னை எண்ணூர் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகளினால் குறிப்பாக தி/ள்.கோரமண்டல் உரத் தொழிற்சாலையினால் வெளியேறும் நச்சுப் புகையினால் எண்ணூர் பகுதி மக்கள் மற்றும் குழந்தைகள் உடல் பாதிக்கப்படுகின்றனர்.
   - ஆகையால், தயவு செய்து தாங்கள், அதிநவீன மாசு பாதுகாப்பு இயந்திரங்கள் மூலம் பொதுமக்கள் பாதிப்பை தவிர்த்திட ஆவண செய்யுமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**சட்டமன்ற உறுப்பினர் / மாமன்ற உறுப்பினர்கள்/பொதுமக்கள் எழுப்பிய கேள்விகளுக்கு விளக்கம் அளிக்க முயன்ற போதிலும், எம்.எல்.ஏ.வும் பொதுமக்களும் கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும், அது நிறுத்தப்படும் வரை இடத்தை விட்டு வெளியேற மாட்டோம் என்றும் தொடர்ந்து கோரிக்கை விடுத்தனர். பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டத்தில் சலசலப்பும்,**

பரபரப்பும் நிலவியது. மேலும், தி/ள். அசோக் லேலண்ட் லிமிடெட் – ஃபவுண்டரியின் விரிவாக்கம் தொடர்பான கருத்துக் கேட்பு கூட்டத்தை ரத்து செய்ய மாவட்ட ஆட்சியரிடம் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். எனவே மாவட்ட ஆட்சியர், கடைசியாக தி/ள். அசோக் லேலண்ட் லிமிடெட் – ஃபவுண்டரி, கத்திவாக்கம் கிராமம், திருவொற்றியூர் வட்டம், சென்னை மாவட்டம், நிறுவனத்தின் வார்ப்பாலை உற்பத்தி திறனை மாதத்திற்கு 2790 டன்னில் இருந்து 6125 டன்னாக விரிவுபடுத்துவதற்கான பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தை தள்ளி வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு, கூட்டம் முடித்துகொள்ளபட்டது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
அம்பத்தூர்.

மாவட்ட ஆட்சியர்
சென்னை மாவட்டம்